FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 821/2026/AC/2026/CC-II

1. District : Chennai | PS: காவல்நிலையம் CC-II | Year: ஆண்டு 2026 | FIR No.: மு.த.அ. எண் 7 | Date: நாள் 19.06.26

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.06.2026 | Date to :
குற்ற நிகழ்வு நாள் | நாள் முதல் at about | நாள் வரை

Time Period : | Time from : 10.15 hrs | Time to :
நேர அளவு | நேரம் முதல் | நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.06.2026 | Time : 16.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 19.06.2026 | Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | நேரம்

4. Type of Information : Written/ Oral : written / typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o. Assistant Engineer (O&M), Thiruvekadu 1.8 km North West.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : | (b) Address :
முறைக் காவல் எண் | முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. Ramesh | (b) Father's/ Husband's Name : G. Abimanyu
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : | (d) Nationality : | (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு | நாட்டினம் | வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : | Place of Issue :
வழங்கப்பட்ட நாள் | வழங்கப்பட்ட இடம்

(f) Occupation Mechanic | (g) Address : No. 6, Millenium Town, Adeyalampattu, Vanagaram, Chennai.
தொழில் | முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Jamaluddin, Commercial Inspector, O/o. Assistant Engineer (O&M), TNEB, Thiruvekadu, Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
By the Complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inspr. Thr. Park ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.S. Nagalakshmi IPS/CCE

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 19/6/26

15. Date & Time of despatch to the court: 19.6.26
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

K.S. NAGALAKSHMI
Name: பெயர் .....
Rank: நிலை INSPECTOR No. எண் ...POLICE,
CHENNAI CITY - II
VQ AC, CHENNAI-16.

.... In Continuation to column no.12 of FIR in Chennai, V&AC, Chennai City-II Cr.No.04/AC/2026/CC-II.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-2-ன் காவல் ஆய்வாளர் K.S.நாகலட்சுமி ஆகிய நான் இன்று 19.06.2026-ந்தேதி காலை அலுவலகத்தில் பணியிலிருந்தபோது வானகரம், அடையாளம்பட்டு கிராமத்தை சேர்ந்த திரு.A.ரமேஷ் என்பவர் காலை 10.30 மணிக்கு அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரினை பெற்று, அந்த புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து, உயர் அதிகாரிகளுக்கு மேற்படி புகாரின் உண்மை தன்மையை தெரிவித்து, உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி இன்று 19.06.2026-ந் தேதி 12.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:-அனுப்புநர் A,ரமேஷ், த/பெ.G.அபிமன்யூ, எண்.6, மில்லியனம் டவுன், அடையாளம்பட்டு, வானகரம், சென்னை-95. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் வானகரத்தில் என்னுடைய வீட்டிற்கு அருகிலேயே சொந்தமாக கார் மெக்கானிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது மனைவியின் அண்ணன் குணசேகரன் என்பவரின் மகன் வினோத்குமார். குணசேகரன் அவர்கள் காலமாகிவிட்டார். நான்தான் வினோத்குமாருக்கு கடந்த டிசம்பர் 2019-ல் சென்னை, திருவேற்காடு, கோலடி, பட்டாபி நகர், பிளாட் நம்பர். 37-ல் உள்ள 1050 சதுரடி காலி வீட்டு மனையை வாங்கி கொடுத்தேன். தற்போது வினோத்குமார் அந்த இடத்தில் வீடுகட்ட வேண்டும் என்று என்னிடம் சொன்னார். அதன்படி நாங்கள் அந்த இடத்திற்கு தற்காலிக மின் இணைப்பு வாங்க ஆன்லைனில் 19.05.2026 அன்று விண்ணப்பம் செய்தோம். அன்றையதினமே நானும் வினோத்குமாரும் திருவேற்காடு EB ஆபீஸ் சென்று AE அவர்களிடம் மின் இணைப்பிற்காக விண்ணப்பித்த விவரம் கூறினோம். AE கணினியில் பார்த்துவிட்டு அப்ளிகேசன் வந்து விட்டது. பீஸ் கட்டிவிட்டு CI ஜமாலுதீன் அவர்களை பாருங்கள் என்று கூறினார். அதன் பிறகு மறுநாள் 20.05.2026 வினோத்குமாரின் வீட்டு மனைக்கு தற்காலிக மின் இணைப்புக்கான அரசு கட்டண தொகையான மொத்தம் ரூ.5,575/-ஐ ஆன்லைனில் செலுத்தினோம். வினோத்குமார் தொடர்ந்து வேலைக்கு செல்லவேண்டியிருந்ததால் என்னையே மின் இணைப்பு வாங்கும் வேலையை பார்த்துக்கொள்ளுமாறு கூறினார். அவரது சார்பாக EB ஆபீஸ் செல்ல கடிதம் கொடுத்தார். நான் CI திரு.ஜமாலுதீன் அவர்களை EB ஆபீஸ் சென்று பார்த்தேன். அவர் கூப்பிடும்போது வாருங்கள் என்று கூறினார். பின்னர் 12.06.2026 அன்று CI திரு.ஜமாலுதீன் வினோத்குமாரை செல்போனில் அழைத்து என்னை அவருக்கு போன் செய்ய சொன்னதாக கூறினார். அன்றைக்கே நான் CI அவர்களிடம் போனில் பேசினேன். அப்போது CI என்னிடம் மின்

இணைப்பு தருவதற்கான எல்லா வேலைகளையும் out sourcing contractor -யை வைத்து தான் செய்கிறோம், அவர்களுக்கு தர ரூ.15,000/- செலவாகும் என்றும், அதனை ஏற்பாடு செய்து தருமாறு CI என்னிடம் தெரிவித்தார். உடனே நான் அவரிடம் வினோத் கஷ்டப்படற பையன் சார், பார்த்து செய்யுங்கனு சொன்னேன். அவர் பதில் எதுவும் சொல்லாததால் நான் 16.06.2026-ந்தேதி காலை சுமார் 10.15 மணியளவில் திருவேற்காடு உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று CI திரு.ஜமாலுதீன் அவர்களை பார்த்து வினோத்குமாரின் தற்காலிக மின் இணைப்பு பற்றி கேட்டேன். அப்போது அவர் அந்த மின் இணைப்பிற்காக ஏற்கனவே கேட்ட ரூ.15,000/-த்தை ஏற்பாடு செய்து விட்டீர்களா என்று கேட்டார். வினோத்குமாரால் பணம் தரமுடியாது, வினோத்குமாருக்கு வீட்டுமனையே நான் தான் வாங்கி கொடுத்தேன், அவனுக்கு அவ்வளவு வசதி இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த தொகையை கான்ராக்டருக்கு கட்டாயம் தரவேண்டும், என்று கூறி நீங்களே காண்ட்ராக்டர் நம்பருக்கு G-Pay செய்து விடுங்கள் என்று சொல்லி காண்ட்ராக்டர் பெயர் வினோத் என்றும், 9710098160 எண்ணில் அவருக்கு G-Pay செய்யும்படி சொன்னார். G-Pay செய்யமுடியவில்லை என்றால் பணத்தை நேரில் கொண்டுவந்து விடுங்கள், நான் பார்த்து அட்ஜஸ்ட் செய்து, ஏதாவது சொல்லி வேலையை முடித்து கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். CI திரு.ஜமாலுதீன் லஞ்சம் கேட்ட விவரத்தை வினோத்குமாரிடம் நேற்று கூறினேன். வினோத்குமாருக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றும் அவர் சார்பாக ஊழல் தடுப்பு துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். எனவே, வினோத்குமாருக்கு வீடு கட்ட தற்காலிக மின் இணைப்பு வழங்க அரசு நிர்ணயித்த கட்டணத்தை செலுத்திய பிறகும், CI திரு.ஜமாலுதீன் லஞ்சமாக கேட்ட பணத்தை கொடுக்க எனக்கும் விருப்பமில்லை. எனவே திருவேற்காடு மின்வாரிய அலுவலர் CI திரு.ஜமாலுதீன் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுக்கிறேன். எனது புகார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள, Sd (XXX) A.ரமேஷ், 19.06.2026. Sir, Received a complaint on 19.06.2026 at 10.30 hrs. Sd (XXX) K.S.Nagalakshmi, 19.06.2026, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16. Sir, after due verification and getting concurrence from Superior Officers concerned, a case was registered in Chennai, V&AC, Chennai City-II Detachment in Crime No.04/AC/2026/CC-II U/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 19.06.2026 at 12.00 hrs. Sd (XXX) K.S.Nagalakshmi, 19.06.2026, Inspector of Police, CC-II, V&AC, Chennai-16.

The original FIR along with written complaint submitted before the Hon'ble Principal District Judge, Thiruvallur and other copies submitted to the officers concerned.

K.S. Nagalakshmi
19/6/26.
Inspector of police,
Chennai city II
V & AC, Chennai-16.